மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.14/2022

வாக்குமூலம்: பி.வா.சா.2 – முருகாயி

15.11.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு
**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1.மணிமேகலை எத்தனை வருடங்களாக எனக்கு தெரியும் என்றால் 10 ஆண்டுகளாக தெரியும். அவர் எனக்கு உறவினரா என்றால் உறவினர் இல்லை. இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சகோதரர் முருகன் தாக்கல் செய்துள்ளார். முருகன் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது, ஆனால் வீடு அவருடையது. இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல, எனக்கு தெரியும், வீடு கட்ட நான் சுயஉதவிக் குழுவிலிருந்து பணம் எடுத்துக் கொடுத்தேன். நான் சொல்வது போல் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது என்றாலும் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**ஒம்/–S.காலீஸ்வரன்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி**